சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—104

முருங்கையும் ஜீவாதாரமும்

பேராசிரியர் த.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 120

வாருங்கள் எம்பிரிய உறவுகளே!

எமது மக்களின் வாழ்வாதாரத்தினை முன்னேற்றுவதற்கான பயணங்களில் நாம் அதிகளவில் கரிசனை கொண்டிருக்கின்ற அதேநேரத்தில் அவர்களுக்கான உணவு, ஊட்டச்சத்து இன்னும் வருமானம் என்பனவற்றையும் கவனத்திற் கொள்ள வேண்டியிருக்கின்றது. இந்தவகையில் அருமை பெருமையாக கிடைக்கின்ற தாவரங்களை வளர்த்து எமக்குத் தேவையான ஊட்டச்சத்தையும் இன்னும் வருமானத்தையும் நாம் பெற்றுக்கொள்ளலாம். எமது பிரதேசத்திற்கென வளருகின்ற தாவரங்களில் முருங்கையும் ஒன்று.

முருங்கையில் கல்யாண முருங்கை மற்றும் கறிமுருங்கை என இருவகைப்படும். கல்யாண முருங்கை சிறந்த கால்நடைத்தீவனம். அத்துடன் இந்துக்களின் திருமண வைபவத்தில் இந்திரனை உருவகித்து கல்யாண முருங்கையை கன்னிக்காலாக பாவித்து திருமணம் செய்துவைப்பர். இப்போது கன்னிக்காலே பிளாஸ்ரிக்கினாலான முருங்கையாகி விட்டது. இது நடப்பது கனடாவிலல்ல யாழ்ப்பாணத்தில். ஒரு வகை பூச்சியினால் பாதிக்கப்பட்ட கல்யாண முருங்கை இலைகள் நாளடைவில் மரத்தையே இல்லா தாக்கிவிட்டன. ஆனாலும் சில இடங்களில் தப்பிப் பிழைத்திருக்கின்ற இந்தமரம் தற்போது பல வீடுகளில் கிளை விட்டு வளருவதை காணலாம்.

மற்றையது கறிமுருங்கை.

முருங்கை என்பது எமக்கொரு அட்சய பாத்திரம். அனைத்து மண் வகைகளிலும் சிறப்பாக வளரக் கூடிய ஒரு மரமாகும். குறிப்பாக மணற்பாங்கான நிலங்களில் மிகவும் சிறப்பாக வளரக்கூடியது. அதற்காக அதனது வேர்த்தொகுதியிலிருக்கும் மைக்கோரைசா எனப்படும் நுண்ணங்கிகளின் கூட்டு ஒப்பந்தமே இதற்கான காரணமாகும்.

முருங்கையிலிருந்து காய், பூ மற்றும் இலை என்பன உணவுக்காக பயன்படுத்தக் கூடியனவாகும். அதிகமாக இரும்புச் சத்தினைக் கொண்டது முருங்கை. எமது நாட்டு முருங்கை அனைத்து சூழலிலும் சிறப்பாக வளரக்கூடிய எங்களூர் தாவரமாகும். மிகவும் சுலபமாக, மலிவாக பெறக்கூடிய இலைகள் சிறந்த சத்துக்களைக் கொண்டிருக்கின்றமை இதற்குரிய சிறப்பம்சமாகும்.

முருங்கையில் ஒரேஞ்சு பழத்தைவிட 7 மடங்குகள் விற்றமின் சீயும், கரட்டைவிட 4 மடங்குகள் விற்றமின் ஏயும், பாலில் உள்ளதைவிட 4 மடங்குகள் கல்சியமும், வாழையிலுள்ளது போன்று 3 மடங்குகள் பொட்டாசியமும் யோகட்டிலுள்ளது போல 2 மடங்குகள் புரதமும் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முருங்கையில் விற்றமின்கள் ஏ, பீ, பீ2, பீ3 விற்றமின் சீ, கல்சியம், குரோமியம், செப்பு, இரும்பு, மக்னீசியம், மங்கனீசு, பொசுபரசு, பொட்டாசியம், புரதம் மற்றும் துத்தம் என்பன காணப்படுகின்றன. ஆக மொத்தத்தில் முருங்கை என்பது ஒரு பல்வகை நுண்ணூட்டச்சத்து உள்ளதாவரமாகும்.

ஹேலீஸ் (Heyles Pvt Ltd) நிறுவனத்தின் ஒரு முன்னேற்பாடான செயற்பாடாக ஜீவாதாரம் (Jeevadhara) என்னும் திட்டம் தற்போது முன்னெடுக்கப்படுகின்றது. இத்திட்டத்தின் மூலம் கிராமத்து வாழ்வாதாரத்தையும் ஊட்டச்சத்து குறைபாட்டையும் நிவர்த்தி செய்து பேண் தகு விவசாய செய்முறைகளுள்ளே அனைவரையும் உள்வாங்குதலாகும். இத்திட்டத்தின் எதிர்பார்ப்பாக ஒருமில்லியன் முருங்கை மரங்களை வடமாகாண மெங்கும் நடவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

தாவரங்கள் அனைத்திற்குமே சிறப்புக்களுண்டு. அவற்றை நாம் அலசி ஆராய்ந்து பார்த்தால் இத்தாவர சாம்ராஜ்யத்தில் அவற்றிற்குரிய தான இடமொன்று இருந்து கொண்டேயிருக்கும். அதனைநாம் இன்னொன்றால் மாற்றியமைத்து விட முடியாது. ஆனால் அவற்றுக் கிணையாக அவற்றின் பயன்பாட்டை நாம் சரிவர புரிந்து கொண்டால் அதனை நாம் மாற்றியமைத்துக் கொள்ளலாம். அதற்கும் எமது புரிதல் இடங்கொடுக்க வேண்டும். இத்தாவர ராஜ்யத்தில் பல தாவரங்களை நாம் கண்டு கொள்வதேயில்லை. அதற்குக் காரணம் அவற்றின் மகத்துவம் எமக்கு தெரியாதிருப்பதுதான். எமக்கென இயற்கை அளித்தருளிய தாவரங்கள் பல இருக்கின்றன. அவற்றை நாம் தெரிந்து கொண்டால் குறிப்பாக அவற்றினது வலிமையை, வல்லமையை நாம் அறிந்து கொண்டால் நாம் உடனேயே பயன்படுத்தத் தொடங்கி விடுவோம். பல ஊட்டச்சத்துக்களை இலகுவாக பெறக்கூடிய விற்றமின்களை கொண்ட தாவரங்களை நாம் அலட்சியமாக தள்ளிவைக்கக் கூடாது. தாவரங்கள் ஒவ்வொன்றினதுமுள்ள மகத்துவத்தை அறிந்து எமது அன்றாட வாழ்வில் உணவில் அதனை பயன்படுத்த தலைப்பட்டால் எமது சுக ஆரோக்கியத்தை நாம் பேணிக்கொள்ள முடியும்.

இதனது காயினை பொதுவாக உணவில் கறிக்கான ஒரு பொருளாக பயன்படுத்துவர். ஆனாலும் இதனது இலையினை கண்டு கொள்வதேயில்லை. கறிமுருங்கையின் இலையில் சிறந்த சத்துக்கள் காணப்படுகின்றன. கிழமைக்கு ஒரு இலைக் கறிவகை என்ற வகையில் முருங்கையிலையினை ஒருநாளைக்காவது பயன்படுத்தலாம். கறி முருங்கையிலையில் இரும்புச்சத்து, கல்சியம் இன்னும் பல விற்றமின்கள் அதிகளவில் காணப்படுகின்றன. கர்ப்பிணிப் பெண்களுக்கு சிறந்த இலைக் கறிவகையாக பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்றது. தினமும் உண்ணும் இலைக்கறி வகைகளுக்குள் முருங்கையிலை தெரிந்தெடுத்துக் கொண்டால் அதனது பயன்பாட்டை நாம் முழுமையாக பெற்றுக்கொள்ளலாம். முருங்கைமரத்தின் எங்களூர் இனம் தற்போது அழிவடைந்து வருகின்றது. இந்தியாவிலிருந்து வருகை தந்த ஒராண்டு கறிமுருங்கை சிறப்பாக இங்கே பயிர் செய்யப்படுவதனாலும் அதிகளவு பெறப்படும் காய்கள் பலசத்தானவை அதிகமாக காணப்படுவதனாலும் எங்களூர் இனத்தைத் தேட வேண்டியதாகி விட்டது. எங்களூர் இனத்தின் உற்பத்திகணிசமானதாக இருப்பினும் அதனது பூச்சியெதிர்ப்பு சக்தி ஒரு காலத்தில் முருங்கையில் வரக்கூடிய பூச்சி பிரச்சினைக்கு எதிர்ப்புள்ள திரளாக அமையும் என்பதனால் அதனை நடவு செய்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

முருங்கையை கவனிப்பாரற்ற தாவரமாக கவனத்திற் கொள்ளாது அதற்குரிய அந்தஸ்தைக் கொடுத்துத்தான் பாருங்களேன். எம்மை சுகதேகியாக வைத்திருக்கும் இவ்வகை தாவரங்களை நாம் பயன்படுத்துவதோடு பாதுகாக்கவும் வேண்டும்.



Hayleys Agriculture
JEEVADHARA
ජීවධාර ஜீவாதார